**வணாத்தவில்லு பிரதேச சபை**
**புத்தளம் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 பெப்ரவரி 28 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 01 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 10 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்களின் மூலம் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வணாத்தவில்லு பிரதேச சபையின் நிதி நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயற்பாடு மற்றும் காசோட்டத்தையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறாகக் காணப்பட்ட ரூபா 44,949 பெறுமதியான மின் உபகரணங்களின் களஞ்சிய இருப்பு மீதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பொது வைப்புக்கள், ஊழியர் கடன் மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் போன்று கணக்கு விடயங்களுக்குரித்தான நிதிக்கூற்றுக்களின் படி ரூபா 5,808,301 கூட்டுத்தொகையான போதிலும் பட்டோலையின் படி அக் கூட்டுத்தொகை ரூபா 5,164,901 ஆகக் காணப்பட்டமையால் ரூபா 643,400 தொகையான இணக்கம் செய்யப்படாத வேறுபாடு கண்டறியப்பட்டது.

#### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 14,175,245 ஆகக் காணப்பட்டதுடன் அத் திகதியில் செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 15,680,811 ஆகக் காணப்பட்டது.

(ஆ) 2010 மே 13 ஆம் திகதிய 5/3 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் படி காலம் கடந்து மீளச் செலுத்தப்பட வேண்டிய வைப்புக்களான ரூபா 1,133,863 வருமானத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 53,882,825 தொகையான கொடுக்கல் வாங்கல்களை திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 1,932,201 ஆக இருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா ரூபா 3,016,636 ஆகக் காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளவாறான வருமானம் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ |
| (அ) | வீதவரியும் வரியும் | 706 | 566 | 1,116 |
| (ஆ) | வாடகை | 1,299 | 1,096 | 246 |
| (இ) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | -- | 202 | -- |
| (ஈ) | ஊழியருக்கான கட்டணம் | 369 | 369 | -- |
| (உ) | ஆணைச்சீட்டுக் கட்டணம் மற்றும் தண்டப்பணம் | 2,599 | 1,823 | 776 |
| (ஊ) | ஏனைய வருமானம் | 2,220 | 1,157 | 2,863 |

**2.2.2 வீதவரியும் வரியும்**

வீதவரியும் வரி மற்றும் ஏக்கருக்கான வரியின் 1 வருடத்திற்கு மேலான காலம் கடந்திருந்த நிலுவையான மீதி, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறாகக் காணப்பட்ட மொத்த நிலுவை மீதிச் சதவீதமாக முறையே 85 சதவீதமும் 84 சதவீதமுமாகக் காணப்பட்டது. மேலும், 2013 ஆம் ஆண்டிற்குரித்தான நீர் வரி அறவீட்டில் நலிவான சதவீதத்தைக் காணக்கூடியதாக இருந்தது.

**2.2.3 வாடகை**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையான வாடகைத் தொகை ரூபா 29,583 ஆகக் காணப்பட்டதுடன் அத் தொகையில் ரூபா 19,333 தொகை மீளாய்வாண்டிற்குரித்தாகக் காணப்பட்டது.

**2.2.4 நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதி மன்றத் தண்டப் பணம் | 775,782 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 2,863,000 |

**2.3 மிகைக்கட்டணம்**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எதிர்காலத்தில் ரூபா 43,341 தொடர்பாக மிகைக்கட்டண நடவடிக்கை எடுக்கப்படுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

**2.4 விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான பௌதீக வளங்கள்**

ரூபா 676,000 தொகையான சொத்துக்கள் 2 முதல் 5 ஆண்டுகள் வரையான காலத்தின் போது விளைவற்றும் குறைவான பயன்பாட்டுடனும் காணப்பட்டன.

**2.5 இனங்காணப்பட்ட நட்டம்**

மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் தொகையான ரூபா 799,797 தொகையில் ரூபா 20,950 தொகை பல வருட காலமாக அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.6 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஆம் ஆண்டின் பாதீட்டுக் கட்டுப்பாட்டின் மூலம் ரூபா 36,937,746 தொகையான 11 மதிப்பிடப்பட்ட வருமான விடயங்களுக்குரித்தான எவ்வித வருமானமும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மதிப்பீடு தயாரிக்கப்படுகையில் முன்னைய ஆண்டுகளின் மதிப்பிடப்பட்ட தரவுகள், அனுபவங்கள், உறப்பட்டிருந்த உள்ளபடியான செலவினங்கள், உழைக்கப்பட்ட வருமானம் ஆகியவற்றைக் கருத்திற்கொள்ளாது பாதீடு தயாரிக்கப்பட்டிருந்தது.

**3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுத் துறைகள் தொடர்பாக சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) களஞ்சியக் கட்டுப்பாடு
(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு